# Forum of BSNL Unions / Associations

## தமிழ் மாநிலம்

## “ SAVE BSNL - SAVE NATION ” எழுச்சிகரமான கடலூர் கருத்தரங்கம்

அன்பார்ந்த தோழர்களே,

“BSNL-ஐ பாதுகாப்போம்- இந்திய தேசத்தை பாதுகாப்போம்” என்ற ஒற்றை கோரிக்கையை முன்வைத்து 30.01.2015 அன்று தமிழ் மாநில FORUMத்தின் சார்பாக கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் ஒரு மிக பிரமாண்டமான கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் இருந்து அதிகாரிகளும், ஊழியர்களுமாய், சங்க வேறுபாடின்றி இந்த BSNL பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொந்த விடுப்பை எடுத்துக் கொண்டு வாகனங்களிலும், பேருந்துகளிலும், ரயில் மூலமாகவும் காலை முதலே கடலூருக்குள் நுழைய துவங்கினர்.

தமிழகம் முழுவதும் இருந்து திரண்ட 1500க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட இந்த பிரமாண்டமான கருத்தரங்கத்தினை FORUM தமிழக அமைப்பாளரும், BSNL ஊழியர் சங்கத்தின் தலைவருமான தோழர் S.செல்லப்பா மற்றும் மாநில தலைவர்கள் தோழர் லட்சம், தோழர் சுந்தர கிருஷ்ணன், தோழர் பங்காரு லட்சுமணன் ஆகியோர் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தனர். இந்த கருத்தரங்கத்திற்கு வந்திருந்தவர்களை எல்லாம் NFTE கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் ஸ்ரீதர் வரவேற்றார்.

இந்த கருத்தரங்கத்தில் தமிழ் மாநிலச் செயலாளர்கள் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் BSNLEU, தோழர் R.பட்டாபி NFTE, தோழர் M.கோபிநாதன் SNEA(I),தோழர் S.சிவகுமார் AIBSNLEA மற்றும் தோழர் P.அழகுபாண்டிய ராஜா SNATTA ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

நமது போராட்டங்களின் நோக்கங்கள் குறித்தும், அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தின் நிலைபாடுகள் பற்றியும், போராட்டங்களின் அவசியம் பற்றியும், அவற்றை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஆலோசனைகளை நமது அகில இந்திய தலைவர்கள் தோழர் P.அபிமன்யு GS., BSNLEU, தோழர் C.C.சிங் GS NFTE, தோழர் K.செபாஸ்டியன் GS SNEA(I) மற்றும் தோழர் M.வேணுகோபால் President AIBSNLEA ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

முத்தாய்ப்பாக தமிழகம் முழுவதும் பொதுமக்களிடம் இருந்து திரட்டப்பட்ட 1,60,000 கையெழுத்துக்களை தமிழ் மாநில செயலர்கள் அனைவரும், அகில இந்திய தலைவர்களிடம் பங்கேற்ற தோழர்களின் பலத்த கரவொலிக்கு இடையே வழங்கினார்கள். தமிழ் மாநிலத்தில் இதற்காக பாடுபட்ட அனைத்து ஊழியர்களையும் பாராட்டிய அகில இந்திய தலைவர்கள், தமிழகத்தின் இலக்கான ஒன்பது லட்சத்திற்கு தேவையான கையெழுத்துக்களை பெற்று பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் அகில இந்திய தலைமைக்கு அனுப்பி விட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தனர். குறித்த நேரத்தில் குறித்த இலக்கினை தமிழ் மாநில FORUM நிறைவு செய்யும் என்ற உறுதியினை பங்கேற்ற தோழர்கள் வழங்கினார்கள். பிப்ரவரி 25ஆம் தேதி நடைபெற உள்ள பாராளுமன்றம் நோக்கிய பேரணிக்கு பெருந்திரளாய் பங்கேற்பது என்பதையும் உறுதி செய்தனர்.

மார்ச்17 முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் நூறு சதவிகிதம் வெற்றிகரமாக நடத்திடுவோம் என்பதை அகில இந்திய FORUM தலைவர்களுக்கு உத்தரவாதம் தரும் வண்ணம் மிகப்பெரிய எழுச்சியோடு இந்த கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

இந்த மாநிலந்தழுவிய கருத்தரங்கத்திற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும், மிகச்சிறப்பாக செய்திருந்த கடலூர் மாவட்ட FORUM தலைவர்களுக்கு வந்திருந்த அனைவரின் சார்பாக அகில இந்திய தலைவர்கள் கதராடை அணிவித்து தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்த கருத்தரங்கம் வெற்றிகரமான கருத்தரங்கரமாக மாற்றிய தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கலந்து கொண்ட தோழர்களுக்கும், BSNL-ஐ பாதுகாக்க வேண்டும்; அதனை நம்மால் முடியும்; நம்மால்தான் முடியும் என்ற பேரெழுச்சியை பங்கேற்ற தோழர்களின் உள்ளத்திலே உருவாகும் வண்ணம் இந்த கருத்தரங்கிலே சிறப்புரையாற்றிய FORUM-த்தின் அகில இந்திய தலைவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி கூறி BSNL ஊழியர் சங்கத்தின் கடலூர் மாவட்ட செயலாளர் தோழர் K.T.சம்பந்தம் இந்த கருத்தரங்கினை நிறைவு செய்தார்.

மத்திய அரசாங்கத்தின் தவறான தனியார் ஆதரவு, பொதுத்துறை விரோத கொள்கைகளில் இருந்தும், உயர் மட்ட நிர்வாகத்தின் செயல்படாத தன்மைகளில் இருந்தும் நம் உயிரினும் மேலான BSNL நிறுவனத்தை பாதுகாப்பதற்கான ஒரு உச்சபட்ச போராட்டத்தை துவங்கி உள்ளோம். மார்ச் 17 முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தம்நடைபெற உள்ளது; அதற்கு முன்னதாக இந்திய நாடு முழுவதும் உள்ள பொதுமக்கள் ஒரு கோடி பேரிடம் கோரிக்கை மனுவில் கையெழ்த்துக்களை பெற்று பிப்ரவரி 25ஆம் தேதி பாராளுமன்றத்தை நோக்கிய ஒரு பேரணி நடத்தி, அதன் இறுதியில் அந்த கையெழுத்துக்களை பாரத பிரதமருக்கு வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும். வெற்றி பெற்றே ஆக வேண்டும். ஏனெனில் இது ஒரு இறுதிப்போர். இன்றைய வாழ்வா? சாவா? என்ற போராட்டத்தில் நாம் அனைவரும் நமது முழுமையான பங்கினை ஆற்றுவது அவசியம். இந்த கடலூர் கருத்தரங்கம் கொடுத்துள்ள வெளிச்சத்தில் நாம் ஒன்று படுவோம்! போராடுவோம்! வெற்றி பெறுவோம்!

தோழமையுள்ள,

| | | |
|---|---|---|
| **R.பட்டாபிராமன்** | **S. செல்லப்பா** | **A.பாபு ராதாகிருஷ்ணன்** |
| **Forum தலைவர்** | **Forum கன்வீனர்** | **மாநிலச் செயலர், BSNLEU** |
| **M.கோபிநாதன்** | **S.சிவக்குமார்** | **P.அழகுபாண்டியராஜா** |
| **மாநிலச் செயலர்** | **மாநிலச் செயலர்** | **மாநிலச் செயலர்** |
| **SNEA(I)** | **AIBSNLEA** | **SNATTA** |